# 1. நூலின் அறிமுகமும் அவசியமும்

'வானாகி மண்ணாகி வளியாகி ஒளியாகி
ஊனாகி உயிராகி உண்மையுமாய் இன்மையுமாய்க்
கோனாகி யானெனதென் றவரவரைக் கூத்தாட்டு
வானாகி நின்றாயை என்சொல்லி வாழ்த்துவனே!"

மாணிக்கவாசகர் - திருவாசகம்

இந்திய ஒன்றியத்தில் நாகரிகத் தொட்டிலாக விளங்கக்கூடிய தமிழ்நாட்டு மண்ணில் ஏராளமான தொல்லியல், சமூகப் படிமங்கள் இந்தியத் தொல்லியல் துறை மற்றும் தமிழகத் தொல்லியல் துறையால் ஆவணப்படுத்தப்பட்டுள்ளன. அதில் 70 விழுக்காடுக்கும் மேல் கொங்கு நாட்டிலிருந்து கிடைத்த தொன்மப்படிமங்கள். மத்திய மாநில அரசுகளால் ஆவணப்படுத்திய தொன்மப் படிமங்கள் மிகவும் குறைந்த அளவே வெளியிடப்பட்டுள்ளதாக ஆய்வாளர்கள் கருத்து தெரிவித்துள்ளனர்.

கொங்கு நாட்டில் குறிப்பாகத் தென்கொங்கு நாட்டில் ஏராளமான தொல்லியல் எச்சங்கள் மத்திய, மாநில அரசுகளால் ஆவணப்படுத்தியிருந்தாலும் இன்னமும் ஆவணப்படுத்தப்படாத பகுதிகளைத் தேடி ஆராய்ந்து அதோடு ஏற்கனவே இருக்கும் தொல்லியல் தொன்மங்களோடு ஆவணப்படுத்தி இதனைக் கல்விப்புலத்தில் வரலாற்று ஆர்வமும், ஆராய்ச்சி எண்ணமும் கொண்ட மாணவர்களுக்குக் கொண்டு சேர்க்க வேண்டும் என்ற உயரிய எண்ணத்தில் இது எழுதப்படுகின்றது.

தொல்லியல் நினைவுச்சின்னங்களை எளிதாக மாணவர்கள், ஆர்வலர்கள் கண்ணுறும் வகையில் இன்றைய வளரும் கணினி யுகத்தில் இருக்கும் இடத்தைத் தெளிவாக உணரும் வகையில்

தீர்க்கரேகை, அட்சரேகைக்களை காட்டும் எண்களையும் பதிவு செய்துள்ளோம். மேலும் அனைவரும் எளிதாகப் பார்த்தும், படித்தும் புரியும் வகையில் தென்கொங்கு நாட்டில் இருக்கும் ஏராளமான கல்வெட்டுகளை சுருக்க விளக்கமாக அட்டவணைப்படுத்தி உள்ளோம். அதில் அப்போதைய காலத்தின் பெயரும், அந்தக் காலத்தில் இருந்த அரசனின் பெயரும், இரும்புக்காலம், வரலாற்றுக் காலம், வரலாற்றுக்கு முற்பட்ட காலம், இடைக்காலம் என காலங்களைப் பிரித்தும் பதிவு செய்துள்ளோம்.

அதுமட்டுமல்லாமல் காலத்தைப் பிரிக்கும் பொழுது ஏற்படும் சிக்கலைத் தவிர்க்கும் வகையில் அந்தக்காலத்தில் கிடைத்த பொருட்கள் என்னவென்ன என்பதை சுருக்கவிளக்கமாகப் பதிவு செய்துள்ளோம். குறிப்பாகக் குடியிருப்பு அழிவுகள், கிடைக்கப்பெற்ற நாணயங்கள், கல்வட்டங்கள், கற்பதுக்கையுடன் கூடிய கல்வட்டங்கள், கருப்பு சிவப்பு ஓடுகள், நெடுங்கற்கள் என சுருக்கமாகவும், விளக்கமாகவும் பதிவு செய்துள்ளோம்.

மேலும், இந்த ஆவணங்களை அரசு இதழில் அல்லது அரசு ஆவணக்காப்பகத்தில் ஆவணப்படுத்திய ஆய்வாளர்களின் பெயர்களையும், அவர்கள் ஆவணப்படுத்திய ஆண்டினையும் சுருக்க விளக்கமாகப் பதிவு செய்துள்ளோம். இதில் தென் கொங்கு நாட்டில் ஆயிரத்திற்கும் மேற்பட்ட தொல்லியல் எச்சங்கள் இருந்தாலும் எளிமையாக எதிர்காலத் தலைமுறையினருக்குக் கொண்டு சேர்க்கும் வகையில் இப்போது நமது பகுதியில் கண் முன் இருக்கக்கூடிய கல்வட்டங்கள், கற்பதுக்கைகள், கல்வெட்டுகள், என ஐநூறுக்கும் மேற்பட்ட இடங்களை மட்டுமே தேர்வு செய்து ஆவணப்படுத்தி உள்ளோம்.

இதில் தாராபுரம், காங்கயம், பெருந்துறை போன்ற இடங்களில் கிடைக்கப்பெற்ற தொல்லியல் எச்சங்கள் அட்ச ரேகை, தீர்க்கரேகை எண்களுடன் பதிவு செய்யப்பட்டுள்ளது. இதைத் தவிர்த்து தாராபுரம், வெள்ளலூர், ஆனைமலை, உடுமலைப்பேட்டை, பழனி பகுதிகளில் கிடைக்கப்பெற்ற

கல்வெட்டுகளைக் குறிப்பிட்டு அப்போது ஆட்சி செய்த சிற்றரசர்களின் பெயர்களோடு ஆவணப்படுத்தப் பட்டுள்ளது. இது ஆவணம் இதழில் வந்த சில பதிவுகளையும், முனைவர் ராஜவேலு, தொல்லியல் ஆய்வாளர்கள் ராஜன், சதீஸ், கோவை துரை சண்முகம் போன்றோரின் மேற்பரப்பு ஆய்வுகளையும் சேர்த்து உடுமலை வரலாற்று ஆய்வு நடுவத்தின் சார்பில் களப்பணியில் ஈடுபட்டு ஆவணப்படுத்திய சில கல்வெட்டுகளையும், தொல்லியல் சார்ந்த சமூகச் சின்னங்களையும் ஆவணப்படுத்தி உள்ளோம்.

தென்கொங்கு நாடு நான்கு பெருவழிகளால் ஏராளமான வெளிநாட்டு வணிகத்தைப் பெற்றது மட்டுமல்லாமல் மாந்தை, தொண்டி என்ற இரு துறைமுகத்தையும் வைத்திருந்ததையும் நாம் அறிந்து கொள்ளவேண்டும். இதனால் ஏராளமான ரோமானிய, அகஸ்டஸ், ஹொய்சாளர் பயன்படுத்திய காசுகள் மிகவும் அதிகளவில் கிடைத்ததையும் இந்த நூலில் குறைந்த அளவே பதிவுசெய்யப்பட்டுள்ளது.

பொதுவாக, தமிழ்நாடு பழங்காலத்தில் மூன்று பெரும் பிரிவாக இருந்ததையே பெரும்பாலான ஆய்வாளர்கள் பதிவு செய்கின்றனர். ஆனால் மயிலை சீனி. வேங்கடசாமி, புலவர் குழந்தை, கோவைக்கிழார், வீ.மாணிக்கம் போன்ற ஒரு சில அறிஞர் பெருமக்கள் மட்டுமே கொங்கு நாட்டையும் சேர்த்து தமிழ்நாட்டில் நான்கு நாடுகள் என்றும் மேலும் துளு நாடு, சேரநாடு என்று ஆறு நாடுகளாகவும் பதிவு செய்துள்ளனர்.

அந்த வகையில் கொங்கு நாடு என்பது பழங்காலத்திலிருந்தே தனித்துவத்தோடு இருந்து வந்ததையும், இதனுள் கடந்த இரண்டாயிரம் ஆண்டுகளுக்கும் மேலாகப் பல்வேறு வேளிர் குலத்தவர், சிற்றரசர்கள், கங்கர்கள், ஹொய்சாளர்கள், கோசர்கள் ஆட்சி செய்து வந்துள்ளனர். இவர்களைத் தொடர்ந்து சேர, சோழ, பாண்டிய மன்னர்களும் ஆட்சி செய்துள்ளனர்.

கி.பி. 13 ஆம் நூற்றாண்டு வரை சிற்றரசர்கள் ஆட்சியில் இருந்த கொங்கு மண்டலம் பிறகு பாளையக்காரர்கள் எனும்

நாயக்கர்கள் கட்டுப்பாட்டில் 16 ஆம் நூற்றாண்டு வரை இருந்தது. 17 ஆம் நூற்றாண்டு முதல் இறுதியில் ஆங்கிலேயர்கள் வசம் சென்ற கொங்கு நாடு 1800 முதல் 1947 வரையிலும் ஆங்கிலேயர் வசம் இருந்தது.

அதன் பிறகு மக்களாட்சி எனும் குடியாட்சி முறையில் ஆட்சி நடைபெறுகின்றது. நாம் தொல்லியல் எச்சங்கள், அல்லது பழங்கால: சமூகப்படிமங்கள், தொன்மங்கள் எனும் வகையில் ஏற்கனவே தொல்லியல் துறையால் ஆவணப்படுத்தப்பட்ட தரவுகளையும், அறிஞர் பெருமக்களால் தொகுத்து எழுதப்பட்ட செய்திகளோடு களப்பணியில் ஈடுபட்டு கிடைக்கப்பெற்ற தரவுகளையும் இணைத்து **தென்கொங்கின் தொன்மங்கள்** எனும் தலைப்பில் நூலாக்கி வெளியிடுகின்றோம்.

கொங்கு நாடு சார்ந்து வரலாற்றுச் செய்திகளை கோவைக்கிழார் புலவர் வடிவேலனார், மயிலை சீனி வேங்கடசாமி, புலவர் குழந்தை, புலவர் செ. ராசு போன்ற ஆய்வறிஞப் பெருமக்களின் நூல்களும் கொங்கு மண்டல சதகங்கள், கொங்கு தேச ராசாக்கள் எனும் ஆவணங்களும், பரந்த அளவில் கொங்கு நாட்டின் வரலாற்றைப் பதிவு செய்துள்ளது. கொங்கு நாடு சார்ந்த கருத்தரங்கங்களும் ஏராளமான வரலாற்றுத் தரவுகளை பதிவு செய்துள்ளது. அதனால் வரலாற்றுத் தரவுகளை மிகச்சுருக்கமாகப் பதிவு செய்து கல்வெட்டுகள், நினைவுச்சின்னங்கள், சமூகப்படிமங்கள் போன்ற செய்திகளைக் கூடுதலாக்கிப் பதிவு செய்துள்ளோம்.

தென்கொங்கு நாட்டில் அய்யா பூங்குன்றன், சதீஷ்குமார், ராஜன், போன்ற ஆய்வறிஞப் பெருமக்கள் ஆவணப்படுத்திய கல்வெட்டுகள், தெய்வத்திரு.துரை சண்முகம், திருப்பூர் வீரராசேந்திரன் வரலாற்று ஆய்வு மையத்தினர், பல்லடம் பொன்னுசாமி தூரன் போன்ற கள ஆய்வுப் பெருமக்கள் பதிவு செய்திட்ட பத்திரிகைச் செய்திகளையும் பதிவு செய்துள்ளோம்.

இவற்றுடன் கோயில்கலை ஆய்வாளர், கோ.சசிகலா தொல்லியல் ஆய்வறிஞர் தெய்வத்திரு. துரை சுந்தரம் அவர்களுடன் களப்பயணம் மேற்கொண்டு ஆவணப்படுத்திய கடத்தூர், கல்லாபுரம், குமரலிங்கம் பகுதிகளில் உள்ள கல்வெட்டுகளையும் பதிவு செய்துள்ளோம். உடுமலை மண்ணின் மகள் தமிழகத் தொல்லியல் முதன்மை கண்காணிப்பாளராக இருந்து தற்போது கேரள திருவனந்தபுரத்தில் முதன்மைத் தொல்லியல் அதிகாரியாகப் பணியாற்றும் திருமதி. மூர்த்தீஸ்வரி அவர்களின் ஆலோசனைப் படியும் தேர்ந்தெடுத்த கல்வெட்டுப் படிமங்களை ஆவணப்படுத்தியுள்ளோம். இன்னமும் ஆனைமலை, பொள்ளாச்சி, தாராபுரம் சார்ந்த பகுதிகளில் இருக்கும் ஏராளமான கல்வெட்டுகளையும், புடைப்புச்சிற்பங்களையும், நினைவுச்சின்னங்களையும் அடுத்தடுத்த பகுதியாக வெளியிடுவோம்.

தென்கொங்கு நாட்டில் தொல்லியல் சின்னங்கள், தொன்மங்கள் ஏராளமாக இருந்தாலும் சூழல் கருதி குறைந்த அளவே பதிவு செய்யப்பட்டுள்ளது. இன்னமும் இதில் வராத வரலாற்றுத் தரவுகள் ஏராளமாக இருக்கலாம். மீண்டும் ஒரு முறை அடுத்த பதிப்பாக வெளியிடும் அந்த விடுபட்ட தரவுகளைச் சேர்த்துக்கொள்வோம்.

இதில் வரலாற்றுக் காலத்தோடு பெருங்கற்காலம், சங்ககாலம், சங்கம் மருவிய காலம் என்று குறிப்பிட்டு இயன்ற வரை ஆண்டு வாரியாகத் தொல்லியல் சின்னங்கள் பதிவு செய்யப்பட்டுள்ளது. இதில் தென்கொங்கு நாடு எனக்குறிப்பிட்டு எதுவும் சொல்லாத போது வடகொங்கும் சேர்த்தும் எழுதப்பட்டுள்ளது. மேலும் தென்கொங்கு எனும் ஒருபகுதியை மட்டுமே முன்னிலைப்படுத்தி அனைத்து செய்திகளையும் ஆவணப்படுத்தும் நிலையில் மற்ற பகுதியிடங்கள் தவிர்க்கப்பட்டும், விடுதலோடும் பதிவு செய்து இருக்கின்றோம்.

தொன்மங்களைக் கண்டுணர்ந்து அறிவதற்குப் பெரும்பாலும் சங்க இலக்கிய நூல்களே துணை நிற்கின்றது. எனவே, அறிஞர் பெருமக்கள் கூறிய கருத்துக்களோடும். வரலாற்று ஆய்வாளர்கள், ஆராய்ச்சியாளர்கள் கூறிய செய்திகளோடும், சங்க இலக்கியப்புலவர்களும் குறிப்பிட்ட இடங்களைக் கூறும் போதும், குறித்த சிற்றரசர்களையோ, மன்னர்களையோ கூறும்போதும் அந்த சங்க இலக்கியப் பாடல் வரிகளையும் இயன்றளவிற்குப் பதிவு செய்துள்ளோம்.

❑❑❑

## 2. தென்கொங்கு நாட்டின் அமைப்பு

சங்க காலம் முதல் 15 ஆம் நூற்றாண்டு பாளையக்காரர்கள் காலம் வரையிலான கொங்கு நாட்டின் தென் பகுதியான நொய்யலுக்குத் தெற்கே, பேரூரிலிருந்து கிழக்கே கரூர் வரைக்கும், அதனிடையேயான தொண்டாமுத்தூர்,கிணத்துக்கடவு, பொள்ளாச்சி, பல்லடம், தாராபுரம், காங்கேயம், உடுமலைப்பேட்டை, பழனி என தற்போதையே பெரும் பரப்பையும்; உள்ளடக்கியதாக நாம் அறிந்துகொள்வோம்.

தென்கொங்கு நாடென்பது மேற்கிலும், தெற்கிலும், கிழக்கிலும் மேற்குத்தொடர்ச்சி மலைகளை அரணாகக் கொண்டு தன்னுடைய வடபகுதியை மட்டும் சமவெளியாகக் கொண்டுள்ளது. இது ஒரு தாயை உருவகப்படுத்திப்பார்த்தால் ஒரு குழந்தை ஈன்றெடுக்கும் தாய் தன்னுடைய குழந்தையை தன் வயிற்றில் சுமந்து கொண்டிருப்பது போன்றும், இதன் முன் வடிவம், ஆனைமலை, பழனி மலை, விருப்பாட்சி மலை, கீரனூர் கொண்டரங்கி மலை நீண்டு கொண்டிருப்பதும், அதன் அடிப்பகுதி ஒட்டன்சத்திரம், திண்டுக்கல் என நீண்டு சென்று கொண்டிருப்பதையும் உருவகித்தால், தென்கொங்கு நாடு ஒரு நிறை மாத கர்ப்பிணித் தாயின் உருவத்தோடு நாம் உருவகம் செய்து கொள்ளலாம்.

மேலும், வடக்கில் நொய்யலாற்றங்கரையையும் கிழக்கில் விருப்பாட்சி பாலாற்றங்கரையினையும் நம் கொங்கு நாட்டை ஆற்றின் கரைகளால் அலையடித்துச் செல்வதாகவே அறியலாம். அதுவும், வால்பாறை, பொள்ளாச்சி, உடுமலைப்பேட்டை ஆகிய பகுதிகள் தாயின் கருவறையில் இருக்கும் குழந்தையைப் போன்று எப்போதும் இதமாகவும், பதமாகவும் இருக்கக்கூடிய தட்ப வெப்பநிலையினை உணரலாம். இன்னும் தென் மேற்குப்

பருவநிலை காலங்களில் பெய்யக் கூடிய மழைகளும், கேரள தேசத்தில் பெய்யக்கூடிய வடகிழக்கு பருவ மழையினையும் உய்த்துணரும் பாக்கியம் பெற்ற மக்கள் கிணத்துக்கடவு, பொள்ளாச்சி. உடுமலை மக்களே என்றால் மிகையில்லை.

மேற்கே வெள்ளியங்கிரி, நீலகிரி மலைகள் 6000, 7000 அடியும், ஆனைமலை சுமார் 6000 அடியும், அதனையொட்டி வால்பாறை, மறையூர், கொடைக்கானல் பகுதிகளும் 7000 அடிக்கும் மேற்பட்டு வான் நோக்கி உயரமாக நின்று இயற்கை அரணாகக்காத்து நிற்கின்றது.

கொங்கு நாடு நெய்தல் நிலமில்லாத (கடற்கரையில்லாத) உள்நாடு. இங்கு மலைகள் அதிகம். எனவே, குறிஞ்சி நிலம் அதிகமாயிருந்தது. காடும் காட்டைச் சேர்ந்த முல்லை நிலங்களும் அதிகம். நெல் பயிரிடும் மருத நிலங்களும் இருக்கின்றன. ஊர்கள், மலைகள், ஆறுகள் முதலியவற்றின் முழுவிவரங்கள் கிடைக்கவில்லை. சில பெயர்கள் மட்டும் தெரிகின்றன. கிடைத்த அளவில் தென்கொங்கு நாட்டின் தொன்மங்கள் எனத் தொகுக்கப்பட்டுள்ளது.



கு ம ரி க் க ட ல்

□□□

# 3. கொங்கு நிலவியல் பெருவழி

'பொற்பு மிகு கொங்குநாடு செழித்திடப் பூமியெங்கும்
நற்பய னுற்றுச் சகித்திடு மென்ன நவிற்று பழஞ்
சொற்பெற வெல்லா வளமும் பொருந்திச் சுரபியொடு
வற்சக மோங்கி வளர்வதன் றோ கொங்கு மண்டலமே"

கொங்கு மண்டச சதகம்-5

கொங்கு நாட்டின் பெயர்க்காரணம் கண்டறிவது எளிதன்று. பல்வேறு காரணங்களினால் அதற்கு அப்பெயர் உருவாகியுள்ளது. கொங்கு என்றாலே தேன் செறிந்த பூக்கள் நிறைந்த காடுகளை, மலைகளைக் கொண்டது என்றே அனைவரும் கூறுவர். ஆனால் வேறு காரணங்கள் காணப்படுகின்றன.

வி.இராமமூர்த்தி கொங்கு வரலாறு என்ற தமது நூலில் கொங்கிலவு மரங்கள் அதிகமிருந்ததால் அப்பெயர் ஏற்பட்டிருக்க வேண்டுமென்பார். கிட்டல் என்ற கன்னட நாட்டுப்பாதிரியார், கொங்கு, கொடகு என்று இரு தொடர்களும் ஓரிரு வேர்ச்சொல்லை உடையன என்பதைக்காட்டிலும், குடகு நாட்டின் சிறப்பு நிலை பெற்ற குடும்பங்களில் ஒன்றிற்கு கொங்கு இல்லம் என்று பெயர் இன்னும் வழங்குதலை வைத்தும், "அன்றைய குடகு நாட்டவர்களும் இன்றைய கொங்கு நாட்டவர்களே" என்று வலியுறுத்து கின்றார்.

வடக்கில் இமயமலை பாப்பா தெற்கில்
வாழும் குமரிமுனை பாப்பா,

என்று பாரதி எல்லைகளைப் பாப்பா பாடலின் வழி உணர்த்துவது குறிப்பிடத்தக்கது. நாமிருக்கும் நாடு நமது என்றுணர் என்று எண்ணம் மேலோங்க வேண்டுமென்றால்

எல்லைகளைப் பற்றி அறிந்திருக்க வேண்டும். கொங்கு நாட்டின் எல்லைகள் குறித்து சிற்சில கருத்து வேறுபாடு இருப்பினும் எல்லோராலும் ஏற்றுக்கொள்ளும்படி விளங்குகிறது கொங்கு மண்டல சதகப் பாடல்.

வடக்குப் பெரும்பாவை வைகாவூர் தெற்கு
குடக்குப் பொறுப்பு வெள்ளிக்குன்று கிடக்கும்
களித்தண்டலை மேவு காவிரி சூழ் நாட்டுக்
குளித்தண்டலை யளவும் கொங்கு"

கொங்கு நாட்டின் மேற்கு எல்லைகள் வெள்ளிமலை, கேரள மாநிலத்தை ஒட்டி அமைந்துள்ளது. இதன் மலைத்தொடர்கள் வில் போல் வளைந்துள்ளன. வில்லின் கணுக்களைப் போல் இடையில் பல கிரிகள் (மலைகள்) ஒவ்வொன்றும் அடுக்கடுக்காக ஒன்றின் மேல் ஒன்றாக உள்ளன. இவற்றில் இயற்கைக்கோயில்கள் உண்டு. இக்கிரிகள் கடல் மட்டத்துக்கு மேல் சுமார் 3000 அடி முதல் 6000 அடி வரை உயரத்தில் உள்ளது. இக்கிரிகளின் பழைய பெயர் பிரம்ம கிரி, விஷ்ணுகிரி, உருத்திர கிரி, சதாசிவ கிரி என்பனவாம். இவை சிவ பெருமானின் ஐந்து முகங்கள் என்பதாக சைவ ஆய்வாளர்கள் பதிவு செய்துள்ளனர்.

## பெருவழி

கோவைக்கருகில் உள்ள அறிவொளிநகரின் மேற்குத்திசையில் 2 கி.மீ தொலைவில் உள்ள காற்றாடும் பாறை என்ற இடத்தில் உள்ள கல்வெட்டு இராசகேசரிப் பெருவழியைப் பற்றியது. இக்கல்வெட்டு அருகிலேயே சோழர்கள் அமைத்த பெருவழியும் உள்ளது. இக்கல்வெட்டு வாசகத்தில் மூன்று முறை நிழல் என்ற சொல் பயின்று வருகின்றது. இங்கு பயன்படுத்தப் பெறும் நிழல் என்ற சொல்லின் பொருளினை விளங்கிக்கொள்ள கேரள மாநில செப்பேடுகள், கல்வெட்டுகள் ஆகியவற்றில் கிடைக்கும் சான்றுகளை அணுகவேண்டும். அந்த ஆவணங்களில் நிழல் என்ற சொல் நிழற்படை (Shodow army) என்ற பொருளில் கூறப்பெறுகின்றது. அரசனைப்பாதுகாக்க இப்படை

பயன்படுத்தப்பெற்றது. கொங்கு வட்டாரத்தில் பெருவழிகள் சோழர் காலத்திலேயே வழக்கத்தில் இருந்தன என்பதற்குக் கல்வெட்டுச் செய்திகள் உள்ளன. அசுரர் மலைப்பெருவழி, சோழமாதேவிப்பெருவழி, பிடாரி கோயில் பெருவழி. முதலிய பெருவழிகள் இம்மாவட்டத்தில் இருந்துள்ளன. பெருவழிகளில் எறி வீரர் என்ற வீரர் பிரிவினர் இருந்துள்ளனர். அவர்கள் பாதுகாப்பில் வணிகர்களும் மக்களும் சென்று வந்தனர்.

கொழுமத்திலிருந்து பழநி வரை சென்றது அசுரர் மலைப்பெருவழி. சோழமாதேவிப்பெருவழி கொழுமத்திலிருந்து சோழமாதேவி வரை சென்றது. வீரநாராயணப்பெருவழி ஆனைமலையிலிருந்து கொழுமம் வரை சென்றது. கருவூரிலிருந்து புகார் வரை சென்ற பெருவழி கொங்கப்பெருவழியாகும். இப்பெருவழியின் தொடர்ச்சியாக இராசகேசரிப்பெருவழி அமைந்திருக்கக்கூடும். பேரூரிலிருந்து பாலக்காட்டுக் கணவாய் வழியே மேற்குக்கடற்கரை வரை இப்பெருவழி சென்றதாகக் கொள்ளலாம். கருநாடகப்பகுதியில் கஜ்ஜல் ஹட்டிக் கணவாய் வழியே தாளவாடி என்னும் ஊரிலிருந்து தணாயக்கன் கோட்டை (தற்போதைய பவானிசாகர்) வரை ஒரு பெருவழி இருந்துள்ளது. பெருவழிகளில் எறிவீரர் என்னும் படைப்பிரிவினர் இருந்துள்ளனர். அவர்களுடைய பாதுகாப்பில் வணிகர்களும் மக்களும் சென்றுவந்தனர்.

❑❑❑

# 4.கொங்கு நாட்டின் அரசியல் பிரிவுகள்

கொழுமத்தில் கிடைக்கும் வீரராசேந்திரனின் கல்வெட்டு ஏழு சிறு நாடுகளைப் பற்றியும், அந்த நாட்டின் உட்பிரிவுகள் குறித்தும் கல்வெட்டில் குறிப்பிடப்பட்டுள்ளது. இதில் பேரூர் நாடு முதல் 5 நாட்டுப் பிரிவுகளுடன் வைகாவி நாடு, நல்லூர்க்கா நாடு என்ற இரண்டு நாட்டுப்பிரிவுகளையும் குறிக்கின்றது.

ஒவ்வொரு நாட்டிலும் தனித்தனியாக ஒரு தலைவன் அல்லது மக்கள் பிரதிநிதி என்பவர் இருந்துள்ளதாகக் கல்வெட்டு வழி அறிய முடிகிறது. இந்தத் தலைவர்கள் சாமந்தர்கள், நாட்டுக் கருமம் ஆராய்வார் எனக் குறிக்கப்படுகின்றனர். தமக்கு நிர்ணயிக்கப்பட்ட எல்லைக்குட்பட்ட ஊர்களிலிருந்து வரி வசூலை பணமாகவும், பொருளாகவும் பெற்றுக் கொடுப்பது இவர்களுடைய பணியாகும்.

தென்கொங்கு, வடகொங்கு பிரிவுகளைத் தவிர மீ கொங்கு (மேல் கொங்கு) என்ற ஒன்று இருந்ததாகவும் சுந்தரமூர்த்தி சுவாமிகள் தேவாரத்தினாலும், பெரிய புராணச் செய்யுள்களினாலும் அறியலாம். மேல் கொங்கு எனும்போது கீழ் கொங்கு இருந்ததா? என்றால் அப்படி இருந்ததாகப்பதிவுகள் இல்லை. ஆனால் மழ கொங்கு எனும் உட்பிரிவு இருந்ததாகத் தெரிகின்றது. பாண்டியன் நெடுஞ் சடையனுடைய செப்பேட்டில் இந்த மழகொங்கு குறித்து செப்பேடு காணப்படுகின்றது. தேர்மாறன் கி.பி. 710 முதல் 740 வரை ஆண்டிருக்க வேண்டுமென்று ஆராய்ச்சியாளர்கள் கூறுகின்றனர். தேர்மாறனுடைய தகப்பன் கோச்சடையன் என்ற பாண்டியன் கொங்கர் கோமான் என்றபட்டத்தை வகித்திருந்தான். தேர்மாறனோ, கொங்கு நாட்டின் ஒரு

பாகமாகிய மழகொங்கத்தை வசப்படுத்திப் பாண்டிக் கொடுமுடி மட்டும் படை எடுத்திருந்தான். தேர்மாறனுடைய மகன் நெடுஞ் சடையன் வடகொங்கின் தலைவனான தகடூர் அதியமான் மீது படையெடுத்துச் சென்றான்.. இவ்வாறு கொங்குநாட்டை தன் ஆதிக்கத்தின் கீழ் கொண்டு வருவதற்கு தேர்மாறன் படை எடுத்துச் சென்ற பாகத்திற்கு மழகொங்கம் என்று பெயர். 'மழகொங்கம் அடிப்படுத்தி, பாண்டிக்கொடுமுடி சென்றெய்தி, பசுமதியது பத்மபாதம் பணிந்தேத்தி" என்று கூறியுள்ளதை யடுத்து மழகொங்கம் கொடுமுடி வரை விரிந்து பரந்திருந்ததை அறியலாம். கொடுமுடிக்குத் தென்கிழக்கே கரூர் எனும் பகுதியில் எழுந்தருளியிருக்கும் சிவபெருமானுக்கு பசுபதி என்று பெயர் . ஆகவே தேர்மாறன் கரூர் பகுதியோடு தனது எல்லையை நிறுத்தியிருக்கலாம் எனத் தெரிகின்றது.

1. கொங்கு நாட்டிலிருந்து நாடுகள் வாரக்கா நாடு – வாயிரக்க நாடு – பல்லடம் பகுதியில் மேற்குப்பகுதி, பொள்ளாச்சி தாலுக்காவின் வடகிழக்குப் பகுதி,
2. பொன்கலூர் (எ) பொங்கலூர்க்கா நாடு – பல்லடம் தாலுக்காவின் கிழபகுதி,
3. தென்பொங்கலூர்நாடு பொங்குலுக்கி நாடு தாராபுரம் தாலுக்காவின் தென்கிழக்கு பாகம்,
4. காங்கேய நாடு (எ) காங்கயநாடு தாராபுரம் தாலுகாவின் வடபகுதி, வெள்ளகோவில் பகுதியின் முழுமைக்கும்,
5. தென்கரை நாடு நரையனூர்நாடு தாராபுரம் தாலுக்காவின் தென்பகுதி முழுமைக்கும்,
6. அண்டநாடு பழனி தாலுக்கா தென் கிழக்குப் பகுதி,
7. வையாபுரி வைகாவி நாடு பழனி தாலுக்கா மேல்பாகம்

   அ. ராஜராஜவளநாடு உடுமலை தாலுக்கா ஆம்ராவதி நதிக்கரை.

   ஆ. கரை வழிநாடு ஆம்ராவதி நதிக்கரையோரம்,
8. நல்லூருக்கா நாடு உடுமலைப்பேட்டை மேற்குப் பகுதி,

9. காவடிக்கா நாடு பொள்ளாச்சி தாலுக்கா கீழ்பாகம்
10. ஆனைமலை நாடு பொள்ளாச்சி தாலுக்கா தென்மேற்குப் பாகம்

இவையே நம் ஆய்வாளர்கள், கடந்த கால ஆசிரியப் பெருமக்கள் தென்கொங்கு நாடு என வரையறை செய்துள்ளனர். இது மட்டுமல்லாமல் இன்னமும் ஒரு சில நாட்டின் பெயர்கள் கல்வெட்டுகளில் காணப்படுகின்றன.

அவை, 1. புறமலை நாடு, 2. புறங்கரம்பை நாடு, 3. வறுப்புக்கா நாடு 4. வீரகேரள வளநாடு. 5. வளுப்புற்றக்க நாடு 6. பருள் நாடு, 7. தேன்கடம்பை நாடு, 8. போசல நாடு, 9. தகடை நாடு

கொங்கு நாட்டிற்குள் இருக்கும் இருபத்தி நான்கு நாடுகளினுள் 10 நாடுகள் கல்வெட்டுகளிலும், கொங்கு மண்டல சதகத்திலும் காணப்பெற்றுள்ளன. பின்னர் குறிப்பிட்ட 9 நாடுகளின் பெயர்கள் கல்வெட்டுகளில் மட்டுமே காணப்படுகின்றன. இவை கொங்கு நாட்டிற்குள் இருந்தாலும் இது வரை இந்த இடம்தான் இந்த நாடு என்று குறிப்பிட்டுச் சொல்லும் படியாக எந்த ஆதாரமும் கிடைக்கப்பெறவில்லை. கொங்கு நாடு செழிப்பாக இருந்த காலத்தில் 24 உட்பிரிவுகளைக் கொண்டிருந்தது என்பதை கல்வெட்டுகளாலும் கொங்கு மண்டல சதகத்தாலும் அறிந்து கொள்வோம்.

**பழைய கைபீது**

புலவர் செ. ராசு தனது சமுதாய ஆவணங்கள் எனும் ஆய்வு நூலில் தென்கொங்கு குறித்தான நூற்றாண்டுகளுக்கும் முற்பட்ட பழைய ஆவணக் கைபீதாக பின்வருமாறு பதிவு செய்கிறார்.

ஆம்பிறாவதி உற்பத்தியான வராகநதி சரித்திரமும், வராகநதி யெவற்க யென்னில் சேற தேசமான கொங்கு நாட்டில் பேரூர், அவினாசி, பவானி கூடல், திறுச்செங்கோடு, கொடுமுடி, திருமுருகன்பூண்டி, வெஞ்மாகக்கூடலும், யிப்படி ஸ்தலங்களுக்கும்

தென் பால் ஆனைமலைக்கும் தெற்கு வராககிரி யென்று யிறுக்குது பேறானது, அந்த வறாககிரியில் வறாகமி கிரரெங்கிற காசுடகோத்திரமான யோகீசுபற சுவாமி சந்நிதானத்தில் வன்னி மரத்தடியில் வெகுகாலம் தவசு பண்ணினத்து நாலே யோகீசுவற சுவாமி பிறீதிட்ச மாகி , வராகிமி கிறருக்கு வரம் குடுத்து, இந்த வறாக கிரியானது, முன் வல்வீதம் ராமவாசம், பண்ணினது நாலே, யோகியாப்பியாச்சத்தோடே யிறுந்த படியினாலே, முன் வல்மீகம் பறாபரண்ணொரு காரணாற்த்தமாக வன்னிமரத்தடியில் வந்து, தவசு கோறியீரத்த நாலேயும் யோகம் செய்தது நாளும் யோகீஸ் வற கிறி யென்று பேர்.

பிற்காலம், வாறாகமுனி யென்ங்குர றிஷீஷ்வரதுபறுபதத்திலே வந்து தவசுமோறி அஷ்ட்டாவக யோகத்தையும் அனுஷ்டிச்சு யோகவிந்தி யடந்தது நாலே மோட்ச சாயுச்சி பதம் பெறுவதற்காக, அநேகமுனீசுறாறும் சித்த புருஷாளும் யிந்த பறுபதத்திலே வாசமாகி யிறுப்பாற்கள். அப்படிப்பட்ட வறாககிறியென்றும், யிந்த வறாககிரியில் பாறாறி யென்ங்குர பாகீறதி பரமேசுவறன் வுத்தாரபடிக்க வறாககிறியில் ஆம்பிற விறுட்சத்தின் மூலத்தில் லுற்ப்பவிச்சு, கெற்ப்பபுறிய்யை வந்தனை புரியும் காமதேனும் னீயும் கெற்ப்ப புறிப்சேத்திரத்தே வந்து சாறுங்களென்று ஸ்ரீகைலாச மூற்த்தி திறுவிளம் பத்தினபடிக்கு ஆம்பிறவிறுட்சத்தில் முலத்தில்வுற்ப்பவித்து அனேகமாகட் சேத்திரங்களையம் சகலமான தேவதையன் சிவ நட்சேந்திரங்களையும் ரட்சிக்கும் பொறுட்டாகி வரும்போது,

அதுக்குக் கீள்பால் அகஸ்தியற் கைலாசத்துலே யிறுத்து தென்பூமி சமன்செய்ய வேண்டி சந்தனு சலத்துக்கு வறுகுரபோது ஆம்பிறாவதி மேல்பாகத்தில் மணல் குவித்து லிங்கம் ணிற்ம்மாணித்து, அற்ச்சனை செயிதபடியனாலே, அந்த சுவாமிக்க அகஸ்தீஸ்வறரென்னும் பேறாச்சுது. அதுக்கும் கீள்பால், வேத்திறாரண்ணியத்தில் கற்னசேசனென்று ஒருலிங்கத்தை யமையவற் பூசை செய்து பேற்பெத்த லிங்கம், அதுக்கு கீள்பால், கொங்கணேசுவறனென்று ஒறு லிங்கம், அதுக்கு கீள் காளீசனென்று ஒரு லிங்கமென்றும், அதுக்கு கீள்பால் தாறுகேசுறனென்றும்,

மூற்த்தி, அதற்க்கு கீழ்பால் வீரேசுறனென்றும் பேற்: அதுக்குக் கீழ்பால் தாலவனத்திலே கோடிலிங்கமென்று மூற்த்தி, அதுக்கும் கீள்பால் கைலாசலிங்கமென்று ஒரு மூற்த்தி, அதுக்குத்தென்பால் கறியாமலீசுவறரென்றும் ஒரு மூற்த்தி, அதுக்கு மேல்புறர் ஆம்பிறாவதியில் உத்திரதிக்கு லேவற்றுவுளாரண்ணியத்தில் லஞ்சுளழிசுவனெ;று ஒரு மூற்த்தி, ஆக பச்சமுற்த்தியும், அதுக்கு பூற்வதிக்கில், பிப்பிலவாரண்ணியத்தில் பெறுமாள் விஷ்ட்டுணு மூற்த்தி ஒன்று. உத்திராபூற்வ திக்கில் மணிமுத்தாநதியும், ஆம்பிறாவதியும் காவேறியும் யிந்த மூணு நதியும் கூடினபடியனாலே திருமகூடல் யென்று பேற்.

மணிமுத்தீசுவறரென்றும் ஒருமூற்த்தி, இப்படி ஆவணி மாதத்தில் மகாட்சேத்திரத்திலும் அமாவசையும் பவற்னமாவாசையும் அற்தோதயம் மகோதயம் சங்றாந்தி முதலான பறுவ தினங்களில் ஸ்நானதற்ப்பணம் செய்ஜீதபேறும், துதியும் பண்ணின பேறும் யிவற்களுக்கு பலம், சாரலோக சாமீப, சாரூபா சாயுச்சிய பதவி அடவாற்களென்றும், ஆம்பிறாவதி மருத்துவத்தில் சொல்ல வறுடுது.

ஆம்பிறாவதியில் உற்பவிச்சபடியனாலே ஆம்பிறாவதி யென்றும், சகலமான பேற்களுக்கும், யிஷ்ட்டகாம்பியாற்;த பெறுளை கிறுமை செயித படியினாலே பொருணயிநதி யென்றும் பேறாச்சுது. ஆம்பிறாவது யிந்த நதி நூபமானபடியனாலே ஆம்பிறாவதுஜீ யென்றும் பேற் வறப்பட்டது.

❑❑❑

# 5. தென்கொங்கின் எல்லைகள்

இனி கொங்கு நாட்டின் தெற்கு எல்லை எதுவெனில் பழநியாகும். சில செய்யுள்களில் வைகாவூர் என்றும், பழனி என்றும் வராக மலை என்றும் கூறியிருப்பதைக் காணலாம். வீவாகவூரும், பழநியும் ஒரே நகரத்தின் பெயர்கள். அந்நகருக்கு அடுத்தாற் போல் சில நாழிகை தூரத்தில் உள்ள மலைத்தொடருக்கு வராக மலை என்று பெயர். அம் மலைத் தொடர்களே கோடைக்கானல் மலைத் தொடர்களாகும். ஆகவே எல்லைகளாக இருப்பவைகள் வராக மலைத் தொடரும், அதற்கடுத்து மேற்கே இருக்கும் ஆனைமலைத் தொடர்களாகும்.

இனி மேற்கெல்லை வெள்ளி மலைத்தொடர் என்றும் எல்லாப் பாடல்களிலும் சொல்லியிருக்கக் காணலாம். வெள்ளி மலையைச் சேர்ந்து வடக்கே படர்ந்திருப்பது நீலகிரியாகும். இவ்விரண்டும் கொங்கு நாட்டின் மேற்கு எல்லைகள்.

கொங்கு நாட்டை ஆய்வு செய்த அமெரிக்க ஆய்வாளர் பிரைன் ஜெ.மார்ட்டன் வடகொங்கின் சமூக அரசியல் பண்பாடு கூறுகளை விரிவாக ஆய்வு செய்துள்ளார். அதே போன்று, பிருந்தாபெக் எனும் ஆய்வாளரும் 'வட்டார வரலாறு பற்றி சில நோக்குகள்" எனும் நூலில் கொங்கின் உட்பகுதிகளை ஆய்வு செய்து பதிவு செய்துள்ளார்.

**பண்டைய குடிகள்**

தென்கொங்கு நாட்டைச் சுற்றிலும் பெரும் பகுதி மேற்கிலும், தெற்கிலும், கிழக்கிலும் மலைப்பகுதியாக இருப்பதை நாம் அறிவோம். இம்மலைத்தொடரில் ஏராளமான கனிம வளங்கள் நிறைந்துள்ளன. இப் பெரு மலைப்பகுதியில் புலி, சிறுத்தை, யானை போன்ற பெரும் விலங்குகளும் இருக்கின்றன. மயில், வல்லூறு போன்ற பறவைகளும், பாம்பு, உடும்பு

போன்ற ஊர்வனவும் நிறைந்திருக்கும். இது மட்டுமல்லாமல் அழகிய நீரருவிகளும், நீர் வீழ்ச்சிகளும் காணப்படும். இத்தகு மலைப்பிரதேசங்களில் சாதாரண பொதுமக்கள் வாழ்வதென்பது மிகவும் கடினமான செயல். இந்த மேற்குத் தொடர்ச்சி மலையில் வால்பாறை முதல் கோடைக்கானல் வரை குழிப்பட்டி, குறுமலை, கோடந்தூர், பூம்பாறை, மஞ்சம்பட்டி, கூக்கால், தளிஞ்சி, தளிஞ்சி வயல் போன்ற இடங்களில் மலைவாழ் மக்கள் இன்றளவும் வசித்து வருகின்றனர். இவர்கள் ஆண்டாண்டு காலமாக அவ்விடங்களிலேயே வசித்து வருவதாகச் சொல்கின்றனர்.

மலசர் என்றால் மலையில் வாழும் மக்கள் என்றும், காடர் என்றால் காட்டில் வாழும் மக்கள் என்றும் பொருள். இவர்கள் கொங்கு நாட்டின் பூர்வ குடிகளாகவும் நாம் பதிவு செய்யலாம். கொங்குநாடு குடியானவர்கள் என்று முழுமையாக இல்லாமல் கன்னடம், தெலுங்கு பேசுவோர்களோடு சேர்ந்து ஒருகலப்பு நாடாகவும் இருந்துள்ளது.

**மனைக்கிழத்தியர்**

கொங்கு நாட்டுப் பெண்கள் ஆண்களுக்கு நிகராகப் பொருள் வளத்தோடு கொடை கொடுத்தனர். ஆலயத்திருப்பணி செய்தனர். சந்தியாதீபமும், நந்தா தீபமும் வைத்தனர். அவ்வாறு பணிகளாற்றிய வேட்டுவர், வேளாளர் குலப் பெண்களைக் கொங்கு நாட்டுக் கல்வெட்டுகள் 'மனைக்கிழத்தி" என்று அழைக்கின்றனர்.

'கொற்றனூர் காவலன் கள்ளிப் பிள்ளரில் செய்யானன்
மனைக்கிழத்தி உடைய பிராட்டி"
'காங்கயம் காவலன் குறும்பிள்ளரில் செங்காளி
மனைக்கிழத்தி புளியம்மை"
'இளம்பள்ளியில் வெள்ளாளர் காடைகளில் அவிநாசி
தேவன் மனைக்கிழத்தி தேவன் சொக்கி"
'விசயமங்கலத்து வெள்ளாளர் சாத்தந்தைகளில்
சிறியான் உடையாள் மல்லக்கிழத்தி தாவந்தா வலி"

என்பன சில மனைக்கிழத்தியர் பெயர்கள்.

**தென்கொங்கு நாட்டுப் பகுதியின் ஒரு பக்கம் - காசுகள்**

கி.பி. 5 ஆம் நூற்றாண்டிற்கு முன்பு சமணசமயம் தழைத்தோங்கி இருந்ததையும் அதன் ஒரு எச்சமாக அயிரை மலை எனும் ஐவர் மலை இருந்ததையும் காணலாம். திருமூர்த்தி மலையில் ஒரு குன்றிலும் தீர்த்தங்கரர் சிலை உள்ளது. இதனை அறியாதவர்கள் மும்மூர்த்திகள் சிலை என்றும் இன்றளவில் வழிபட்டு வருகின்றனர்; இதே போல் குதிரை ஆற்றுப் பகுதிக்கு செல்லும் வழியில் நரிப்பாறை என்றும் குன்றினுள்ளும் சமணர் சார்ந்த நினைவுச்சின்னங்கள் உள்ளது. கொங்கு நாட்டில் இயற்கை வளங்கள் ஏராளமாக இருந்துள்ளது. இதைக் கொள்ளையடிக்கும் வகையிலும், வேளிர் குலத்தைச் சார்ந்த சிற்றரசர்கள் தம்பக்கத்து நாடுகளுக்குள் அடிக்கடி போர்செய்துள்ளனர். இதனால் பெரும்பாலான இயற்கை வளங்கள் அவர்தம் செய்கைகளால் சிரழிக்கப்பட்டன. பெரீஸ் எனும் ரத்தினக்கற்கள் ஏராளமாக திருப்பூர் அருகே உள்ள படியூர் பகுதியில் கிடைத்துள்ளன. இவற்றை இக்கற்களை ரோமானிய சீமாட்டிகள் மிகவும் விரும்பி அணிந்துள்ளனர். இதனாலேயே இங்கு மேலை நாட்டினர் வருகையும் வணிகமும் அதிகரித்துள்ளதாகக் கல்வெட்டுகள் வழி அறிய முடிகின்றது. மேற்குத் தொடர்ச்சி மலையில் மிளகும், ஏலக்காயும் ஏகபோகமாக விளைந்திருந்தன. இவை உலக நாடுகள் அனைத்திற்கும் ஏற்றுமதி ஆகி உள்ளன. பொதுவாக சொல்லப்போனால் நிலம்படுபொருள், கடல்படுபொருள், மலைபடுபொருள் என அனைத்துப் பொருள்களும் கொங்கு நாட்டில் மிகுந்த வழங்கலாக இருந்ததால் வெளிநாட்டினர் வருகை அதிகரித்தது. தமிழர்கள் திரைகடலோடியும் திரவியம் தேடுவதற்காக நாவாய்களைக் கட்டி வணிகத்தில் ஈடுபட்டனர்.

மேலும் நிலப்படுபொருளாகிய இரத்தினக்கற்கள் படியூரிலிருந்து கிரேக்கம் வரை சென்றுள்ளதற்கான சான்றுகளையும் நாம் அறிந்துகொள்வோம். அந்த ரத்தினக்கற்கள் பச்சை நிறம் வாய்ந்தவை. சமீப காலம் வரை கி.பி.1819–20 வரையிலும் ஏராளமான ரத்தினக்கற்கள்

எடுக்கப்பட்டுள்ளது. அவ்விடத்தில் 60 சேர்கள் கிடைத்துள்ளது. அப்போதைய அவற்றின் மதிப்பு 18 ஆயிரம் ஆகும். 18 ஆம் நூற்றாண்டில் 18 ஆயிரம் மதிப்பெனில் தற்போதைய மதிப்பு எவ்வளவு கோடிகளைத் தாண்டும் என்பதை நீங்களே யூகித்துக்கொள்ளுங்கள்.

உரோமானிய நாட்டு நூல்களின் படி ஆராய்ந்தால் எவ்வளவோ ரத்தினக்கற்கள் இங்கிருந்து எடுத்துச்சென்றதாகப் பதிவுகள் கிடைத்துள்ளது. ரோமானிய நாட்டின் அகஸ்டஸ் காசுகள் ஏராளமாகக் கிடைத்ததை வைத்துப்பார்த்தால் இங்கிருந்து அதிகளவிலான ரத்தினக்கற்கள் ரோம் நகருக்குச் சென்றதை அறிய முடிகின்றது.

மேலும் இதையொட்டிய உடுமலையை அடுத்த பூதிநத்தம் எனும் வடபூதிநத்தம் கிராமத்தில் இந்தியாவில் அதிக அளவான 1408 ரோமானியக்காசுகள் கிடைத்ததையும் நாம் விரிவாகப் பதிவு செய்துள்ளோம்.

அதே போன்று பொள்ளாச்சி, வெள்ளலூர் பகுதிகளிலும் ரோமானியக்காசுகள் கிடைத்ததையும் நாம் பதிவு செய்துள்ளோம்.

- 1888 இல் பொள்ளாச்சியில் அகஸ்டஸ் காசுகள்
- 1842 இல் வெள்ளலூரில் அகஸ்டஸ் காசுகள் கிடைத்துள்ளன.
- 1878 இல் கரூரிலும் அகஸ்டஸ் கிடைத்துள்ளன.
- 1842 இல் வெள்ளலூரில் ட்ரூஸஸ் காசுகள் கிடைத்துள்ளன.
- 1856 இல் பழனி கலையமுத்தூரில் ட்ரூஸஸ் காசுகள் கிடைத்துள்ளன.
- 1842 இல் வெள்ளலூரில் ஜெர்மானிக்ஸ் காசுகள் கிடைத்துள்ளன.